# HISTORY OF INDIA FROM 1947-1997 C.E
## UNIT-I
# நேரு சகாப்தம், 1947-1964
# சுதந்திர இந்தியா

**1647-1947: பின் பார்வை**

1647-இல் இங்கிலாந்தின் கிழக்கிந்தியக்க ம்பெனி இந்தியாவில் இருபத்தி மூன்று இடங்களில் வர்த்தகக் கிடங்குகளை நிறுவி நிர்வகித்து வந்தது. 1757-இல் நடைபெற்ற பிளாசிப் போரில் வெற்றி பெற்றுக் கல்கத்தாவைக் கைப்பற்றிக் கொண்ட கம்பெனி வங்காளத்தில் அதன் மேலாதிக்கத்தை ஏற்படுத்தியது. 1857-இல் ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக எழுந்த பெருங்கிளர்ச்சி' ஒடுக்கப்பட்டு இந்தியா இங்கிலாந்தின் முடியாட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. 1947-இல் இந்தியா பிரிட்டனின் பிடியிலிருந்து விடுதலை அடைந்தது. 300 ஆண்டு கால அந்நிய ஆதிக்க இருள் விலகி இந்தியாவில் சுதந்திர ஒளிபடர்ந்தது.

**விடுதலையின் போது இந்தியா**

இந்தியா 1947 ஆகஸ்டு மாதம் 14-15ம் நாள் நள்ளிரவில் பிரிட்டிஷ் பேராதிக்கத்தின் பிடியிலிருந்து விடுதலை அடைந்த போது ஒரு சகாப்தம் முடிந்து மற்றொரு சகாப்தம் ஆரம்பித்தது. சுதந்திர இந்தியா பிரிட்டிஷ் ஆட்சி போட்டுக் கொடுத்த பாதையை செப்பனிட்டு, மறுசீரமைத்து, சீர்திருத்தி மிகுந்த நம்பிக்கையோடு பயணத்தைத் தொடர்ந்தது. தேச விடுதலைக்குப் போராடிய தலைவர்கள் புதிய தொலைநோக்குடன் தேசப் புனரமைப்புக்குப் பொறுப்பேற்றனர்.

**அட்லியின் அறிவிப்பு (The Attlee Declaration, 1947 பிப்ரவரி)**

1946 ஆகஸ்டு 16-ம் தேதி "இடைக்கால அரசாங்கத்தை " (Interim Government) அமைக்குமாறு வைசிராய் வேவல் பிரபு,

ஜவகர்லால் நேருவைக் கேட்டுக் கொண்டார். நேரு அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார். ஆனால் ஜின்னா இடைக்கால அரசாங்கத்தில் சேர முதலில் மறுத்துவிட்டார். மாறாக, அந்நாளைத் `துக்கதின'மாகவும், நேரடி நடவடிக்கை நாளாகவும் (Direct Action Day) அனுசரிக்க வேண்டுமென்று அறிவித்தார், கல்கத்தா இனக்கலவரக் களமாயிற்று. திட்டமிட்ட தாக்குதல்களால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. வைசிராய் வேவல் பிரபு செயலிழந்தார்! அந்த நெருக்கடியான நேரத்தில் தொழிற்கட்சியின் பிரிட்டிஷ் பிரதமர் கிளமண்ட் அட்லி (Clement Attlee) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பை வெளியிட்டார் (1947 பிப்ரவரி 20).

**பிரிட்டிஷ் பிரதமர் அட்லியின் அறிவிப்பின்படி**

1) 1948 ஜூன் முதல் தேதிக்குள் பரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு அதிகார மாற்றம் செய்துவிடும்

2) இந்தியாவில் யாரிடம் அதிகாரப் பொறுப்பை ஒப்படைப்பது என்பதைப் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்யும்;

3) வேவல் பிரபுவுக்குப் பதில் மௌண்ட்பேட்டன் பிரபு இந்திய வைசிராயாக நியமிக்கப்படுவார். சுருங்கக்கூறின், அட்லியின் அறிவிப்பு வெள்ளையன் இந்தியாவை விட்டு வெளியேறுவதை உறுதி செய்தது.

**மௌன்ட்பேட்டன் திட்டம் (The Mountbatten Plan, 1947)**

பிரிட்டிஷ் பிரதமர் அட்லியின் அறிவிப்பைத் தொடர்ந்து வைசிராயாக நியமிக்கப்பட்ட மௌன்ட்பேட்டன் பிரபு இந்தியாவுக்கு வந்தார் (1947 மார்ச் 22). வைசிராயாகப் பதவியேற்ற உடனேயே அவர் ஜின்னா, நேரு, வல்லபாய் பட்டேல், அபுல் கலாம் ஆசாத், காந்தி மற்றும் முக்கிய தலைவர்களுடன் கலந்தாலோசித்தார். அதன்பின் மௌன்ட்பேட்டன் அட்லியின் அறிவிப்பையொட்டி ஒரு திட்டத்தைத் தயாரித்தார் அத்திட்டத்தைத் தயாரிக்க நேருவும், வைசிராயின் சீர்திருத்தக் கமிஷனராகயிருந்த வி.பி. மேனனும் உறுதுணையாக

இருந்தனர். பிரிட்டிஷ அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்ற அத்திட்டமே 'மௌன்ட்பேட்டன் திட்டம்' என்று அறியப்படுகிறது. இதுவே இந்தியப் பிரிவினைக்கு (Partition of India) அடிப்படையாக அமைந்தது.

மௌன்ட்பேட்டன் திட்டம் ஒரு கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்த 400 மில்லியன் மக்களையும், அவர்கள் நாற்றாண்டு காலமாகச் சேர்த்து வைத்த சொத்துக்கடி சமாதான சகவாழ்வையும் சீர்குலைத்து விட்டது. இந்தியா விடுதலை அடைவதறல் சரியாக எழுபத்தி மூன்று நாட்களுக்கு முன் இந்தியாவை இரண்டாகப் பிள*ந்து* விடுவதற்கான முடிவெடுத்தார் மௌன்ட்பேட்டன். 1947 ஜூன் 3 ஆம் *தே*தி இந்தியப் பிரிவினையைப் பற்றி மௌன்ட்பேட்டனும், நேருவும், ஜின்னாவும் டெல்லி வானொலி மூலம் அறிவித்தனர். அந்த அறிவிப்புக்கு இந்திய விடுதலைச் சட்டம் வடிவம் கொடுத்தது. இந்திய தேசிய காங்கிரஸ் அங்கீகாரம் அளித்தது. உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய, சிக்கல் மிக்க விவாகரத்து' நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜின்னாவின் பிடிவாதத்துக்கும் வன்முறைப் போக்குக்கும் வளைந்து கொடுத்த இந்தியத் தலைவர்கள் கொள்கையை விட்டுக் கொடுத்து, மனச்சான்றை அடகு வைத்து, அதிகார ஆசைக்கு ஆட்பட்டு இந்தியாவின் இரண்டு வளமிக்க மாகாணங்களான பஞ்சாபையும், வங்காளத்தையும் கூறுபோட இசைந்தனர். இந்தியப் பிரிவினை சமகால வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட மாபெரும் மோசடியாகும்.

**இந்திய விடுதலைச் சட்டம் (Indian Independence Act, 1947 ஜூலை\)**

'இந்தியப் பிரிவினை' முடிவானதும் பிரிட்டிஷ் அரசாங்கம் துரிதமாகச் செயல்பட்டது. பிரிவினைத் திட்டத்துக்கு வடிவம் கொடுக்கப்பட்டது. இந்திய விடுதலை மசோதா தயாரிக்கப்பட்டு, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு (ஜூலை 4), இந்திய விடுதலைச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது (ஜூலை 18).

**விடுதலை விடிதல் (Dawn of Independence, 1947 ஆகஸ்ட் 15)**

சுதந்திர இந்தியா 1947 ஆகஸ்டு மாதம் 14-15 நள்ளிரவில் பிறந்தது. புது டெல்லியில் நாடாளுமன்றக் கட்டிடத்தின் மைய மண்டபத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றம் கூடியது. அதற்கு ராஜேந்திரப் பிரசாத் தலைமை தாங்கினார். சரியாக இரவு பனிரெண்டு மணிக்கு சுசேதா கிருபளாணி 'வந்தே மாதரம்' பாடலை உணர்ச்சியோடும் பெருமிதத்தோடும் பாடினார். ராஜேந்திரப் பிரசாத்தின் தலைமை உரைக்குப் பின் ஜவஹர்லால் நேரு இந்திய சுதந்திரம் பற்றிய தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார். அவரது குரல் நள்ளிரவின் நிசப்தத்துக்கிடையே கணீரென ஒலித்தது.

நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னால் நாம் விதியோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம். அந்த ஒப்பந்தத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளும் நேரம் வந்துவிட்டது. இந்த நள்ளிரவு நேரத்தில் உலகமே உறங்கிக் கொண்டிருக்கையில் இந்தியா சுதந்திரமாக வாழ்வதற்காக விழித்துக் கொள்கிறது. நேரு முன்மொழிந்த தீர்மானத்தை சௌதரி காலிகுவாஸ்மன் வழிமொழிந்தார். எந்நிகழ்ச்சியின் இறுதியில் உரையாற்றிய தத்துவ வித்தகர் டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் தீர்க்கதரிசனத்தோடு குறிப்பிட்டதாவது:

நமக்குள்ள வாய்ப்புகள் பெரிது... நாம் அதற்கான தகுதியையும் திறமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். உயர் பதவிகளில் ஊழல், உறவினர்களுக்குச் சலுகை, அதிகார ஆசை, நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு ஆதாயம் பெறல், கருப்புச் சந்தை ஆகியவற்றின் அடிச்சுவடுகளை அகற்றாவிடில் நிர்வாகத் திறமையையும், நல்வாழ்வுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்தி மற்றும் வினியோகத்தையும் உறுதி செய்ய முடியாது".

அரசியலமைப்புச் சட்டமன்ற உறுப்பினர்களின் சுதந்திர தின சூளுரைக்குப் பின் பெண்களின் சார்பாக ஹன்சா மேத்தா மூவர்ண

தேசியக் கொடியை எடுத்துக் கொடுக்க, இந்தியாவின் கடைசி வைசிராயும் முதல் கவர்னர் ஜெனரலுமான மௌன்ட்பேட்டன் பிரபு கொடி மரத்திலிருந்து யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு அதற்குப் பதில் சுதந்திர இந்தியாவின் அசோகச் சக்கரம் பதிக்கப்பட்ட மூவர்ணக் கொடியை ஏற்றினார். இந்தியா விடுதலை அடைகிறது' என்று அரசியலமைப்புச் சட்டமன்றப் பிரகடனத்தில் கையெழுத்திட்டார். அன்றிலிருந்து அரசியலமைப்புச் சட்டமன்றம் இந்தியாவின் நாடாளுமன்றமாயிற்று. மக்களின் ஆரவாரத்துக்கிடையே இராணுவ அணிவகுப்புடன் முதல் பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேரு, அவரது சகாக்களுடன் சென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஆனால் அக்காட்சியைக் காண மகாத்மா காந்தி அங்கில்லை. அவர் நவகாளியில் இந்து-முஸ்லீம் இனக்கலவரத் தீயை அணைப்பதில் முழுமூச்சுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்.

**இந்தியப் பிரிவினை (Partition of India)**

**ராட்கிளிப் எல்லைக் கமிஷன் (The Radcliffe Boundary Commission)**

மௌன்ட்பேட்டன் திட்டத்தின்படி இந்தியப் பிரிவினை முடிவாயிற்று. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சேரவேண்டிய பகுதிகளைப் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் ஒரு எல்லைக் கமிஷனை அமைத்தது. அக்கமிஷனின் தலைவராக சர் சிரில் ராட்கிளிப் (Sir Cyril Radcliffe) நியமிக்கப்பட்டார். ராட்கிளிப் செல்வச் செழிப்பு மிக்க விளையாட்டு வீ ரரின் மகன். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் சட்டக்கல்வியில் தேர்ச்சி பெற்றார். திறமைமிக்க பாரிஸ்டராகப் புகழ்பெற்றார். பல்கலை வல்லவர். ஆனால் அவருக்குப் பஞ்சாப் - வங்காள எல்லைகளைப் பற்றியோ அல்லது இந்திய எல்லைச் சட்டச் சிக்கல்கள் பற்றியோ எதுவும் தெரியாது! அவர் இந்தியாவுக்கும் வந்ததில்லை! அதன் காரணமாகவே ராட்கிளிப் பாரபட்சமின்றி செயல்படுவார் என்று கருதி எல்லைக் கமிஷனத என்று கருதி

எல்லைக் கமிஷன் தலைவராக நியமிக்கப்பட்டார் (1947 ஜூன் 24). ராட்கிளில் இந்தியா வந்தவுடன் இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பிரச்னை. வைசிராய் மௌன்ட்பேட்டனுடன் கலந்தாலோசித்தார். முஸ்லீம்களும் முஸ்லீம்களால் தோரும் பெரும்பான்மையினராக உள்ள பகுதிகளையும் பிற காரணிகளை கணக்கிலெடுத்துக் கொண்டு எல்லைக் கோடுகளை முடிவு செய்யுமாறு யோசனை கூறினார் மொன்ட்பேட்டன். ஆனால் அவர் பிற காரணிகள் யாவை என்பது பற்றி கூறவில்லை. இந்திய இராணுவத் தலைவராயிருந்த சர் கிளாட் அச்சின் லெக் (Sir Claude Auchinleck) எல்லைக் கோடுகளை வகுக்கையில் பாதுகாப்புப் பிரச்னை வேண்டாம் என்று ராட்கிளிப்புக்கு உறுதி கூறினார்.

எல்லைப் பிரிவினைத் திட்டத்தை 1947 ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்குள் கொடுத்துவிட வேண்டும் என்ற வைசிராய் மௌன்ட்பேட்டனின் நிபந்தனை ராட்கிளிப்புக்குப் பெரும் கவலையை அளித்தது. பிரிக்கப்பட வேண்டிய எல்லைப் பகுதிகளை நேரில் சென்று பார்வையிடவோ, எல்லைப் பகுதி மக்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிவதற்கோ ராட்கிளிப்புக்குப் போதிய கால அவகாசமில்லை. அவசரமாக எல்லைக் கோடுகளை வகுப்பதில் தவறுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாது என்று எச்சரித்தார் ராட்கிளிப். எனினும் அந்த அறுவை சிகிச்சை'யை மௌன்ட்பேட்டனும், ஜின்னாவும், நேரும் ஏற்றுக் கொண்டனர்.

## ராட்கிளிப் தீர்ப்பு (Radcliffe Award)

நிலப்படங்கள், மக்கள் தொகை அட்டவணைகள், ஆவணங்கள், புள்ளி விவரங்கள், அறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்குச் சேரவேண்டிய பஞ்சாப்- வங்காள எல்லைப் பகுதிகளை முடிவு செய்தார் ராட்கிளிப் அவருக்குக் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கால் அங்கீகரிக்கப்பட்ட எட்டு உயர்நீதி மன்ற நீதிபதிகள் உதவி செய்தனர். பிரிவினைக்குப் பின்னரும் பஞ்சாபிலும், வங்காளத்திலும் பெரும்பான்மைச்

சமூகத்தினரிடையே சிறுபான்மைச் சமூகத்தினர் விடுபடுவது தவிர்க்க முடியாததாயிற்று. இதன் பின்விளைவுகளைப் பற்றி ராட்கிளிப் நன்கறிந்திருந்தார். எனினும் கால நெருக்கடியின் கட்டாயத்துக்குட்பட்டு அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றினார். ராட்கிளிப் தீர்ப்பு 1947 ஆகஸ்டு 1 ஆம் தேதி - அதாவது இந்தியா சுதந்திரம் பெற்று இரண்டு நாட்களுக்குப் பின்னர் வழங்கப்பட்டது.

**பஞ்சாப் பிரிவினை (The Partition of Punjab)**

ராட்கிளிப் எல்லைக் கமிஷன் தீர்ப்பின்படி பஞ்சாப் இருகூறுகளாகப் பிரிக்கப்பட்டது. மேற்கு பஞ்சாப் பாகிஸ்தானுடனும், கிழக்கு பஞ்சாப் இந்தியாவுடனும் இணைக்கப்பட வேண்டும் என்று முடிவாயிற்று. சிந்து நதியிலிருந்து டெல்லியின் எல்லை வரை உள்ள ஒவ்வொரு நகரமும், கிராமமும், நெல் மற்றும் கோதுமை வயல்களும் பிரிக்கப்பட்டன! அதன் விளைவாக இந்தியாவின் கிழக்குப் பஞ்சாபில் வாழ்ந்த முஸ்லீம்கள் பாகிஸ்தானுக்கும், பாகிஸ்தானின் மேற்கு பஞ்சாபில் வாழ்ந்த இந்துக்களும், சீக்கியர்களும் இந்தியாவுக்கும் குடிபெயர்ந்து செல்லவேண்டியதாயிற்று. பன்னெடுங்காலமாகப் பஞ்சாப் இந்தியாவின் நெற்களஞ்சியமாகவும், உழைப்பின் உறைவிடமாகவும், வீ ரத்தின்விளை நிலமாகவும் திகழ்ந்து வந்தது. அங்கு சீக்கியர்களும், இந்துக்களும், மூஸ்லீம்களும் மத நம்பிக்கைகளாலும் நடைமுறைகளாலும், மாறுபட்டிருந்தாலும், மொழியாலும் மரபாலும் பொருளாதாரப் பிணைப்பாலும் ஒன்றுபட்டிருந்தனர். எனவே, பஞ்சாப்பை வடக்கு-தெற்காகப் பிரிப்பது உடலை இரண்டாக வெட்டுவதைப் போன்றது.

**வங்காளப் பிரிவினை (The Partition of Bangal)**

ராட்கிளிப் தீர்ப்பின்படி பஞ்சாப்பைப் போன்றே வங்காளமும் இரு பகுதிகளாகப் து. கிழக்கு வங்காளம் பாகிஸ்தானுடனும், மேற்கு வங்காளம் இந்தியாவுடனும் கப்பட வேண்டும் என்று முடிவாயிற்று.

வங்காளத்தில் வாழ்ந்து வந்த 35 மில்லியன் முஸ்லீம்களும், 30 மில்லியன் இந்துக்களும் சமயவழி வேறுபட்டிருந்தாலும் கலாச்சார - பொருளாதார வழி ஒன்றுபட்டிருந்தனர். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் நாளை இன வேறுபாடின்றி வங்காளப் புத்தாண்டாகக் கொண்டாடி வந்தனர். ரைப் போன்ற கவிஞர்களை இரு இனத்தவரும் போற்றிப் பாராட்டிப் புகழ்ந்தனர். எத்தின் கிழக்குப் பகுதியில் பெரும்பான்மையினராயிருந்த முஸ்லீம்களும், மேற்குப் என் பெரும்பான்மையினராயிருந்த இந்துக்களும் தேசிய உணர்வால் பட்டவர்கள். சணல் சாகுபடியை நம்பியிருந்த முஸ்லீம்கள் நெல் சாகுபடியைச் வருந்த இந்துக்களை நம்பியிருந்தனர். பஞ்சமும், பெரு வெள்ளமும் மாறி மாறி களத்தை வாட்டிய போதெல்லாம் இந்து-முஸ்லீம்கள் அவற்றை இணைந்தே எதிர்கொண்டனர்.

**பிரிவினையின் விளைவுகள்**

**இனக்கலவரங்க ள் (Communal Riots)**

**பஞ்சாப் படுகொலை (Punjab Massacre)**

ராட்கிளிப் பஞ்சாப் பிரிவினை பற்றிய தீர்ப்பு குளவிக்கூட்டில் கைவிட்ட கதையாயிற்று! பஞ்சாபியரின் பெரும்பான்மையோர் அத்தீர்ப்பை ஏற்கவில்லை. 1947 துவக்கத்திலிருந்தே பஞ்சாபில் நிலவி வந்த இன ஒற்றுமை குலையத் துவங்கியது. முஸ்லீம் லீக் 'இன வெறியர்கள்' பஞ்சாப் முஸ்லீம்களை இரகசியமாகச் சந்தித்து அவர்களது உள்ளங்களில் இனவாத நச்சு விதைகளை விதைத்து வந்தனர்; இன வெறுப்பைத் தூண்டி விட்டனர். இந்தியப் பிரிவினை நடைமுறைக்கு வருமுன்னரே பஞ்சாபில் இனக்கலவரம் எரிமலையாய் வெடித்தது. 1947 மார்ச் மாதம் ஒரு சீக்கியத் தலைவர் முஸ்லீம் லீக்கின் கொடிக் கம்பத்தை வெட்டிச் சாய்த்ததன் விளைவாக மூவாயிரம் இந்துக்கள் - பெரும்பாலும் சீக்கியர்கள்- கொன்று குவிக்கப்பட்டனர். திட்டமிட்ட கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் பஞ்சாப்பை இனமோதல் படுகளமாக்கின. பத்தாண்டுகளுக்கும் மேலாகப் பஞ்சாப்பை ஆட்சி செய்து வந்த கூட்டணி அரசாங்கம் பதவி விலகியது, பஞ்சாப் ஆளுநர் சர் இவான்

ஜென்கின்ஸ்(SirEvanJenkins) நிர்வாகப் பொறுப்பேற்றார்.

மார்ச் மாதம் படுகொலையால் பாதிக்கப்பட்ட சீக்கியர்கள் பழிக்குப் பழி வாங்கக் காத்திருந்தனர். 1947 ஜூன் மாதத் துவக்கத்தில் வைசிராய் மௌன்ட்பேட்டனும் இந்திய அரசியல் தலைவர்களும் டில்லியில் பிரிவினை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கையில் சீக்கியர்கள் லாகூரில் மாஸ்டர் தாராசிங் தலைமையில் எதிர்த்தாக்குதல் பற்றித் திட்டமிட்டனர்.

இந்தியா சுதந்திரம் பெற்றபோது மேற்கு பஞ்சாபிலிருந்து இந்து - சீக்கியர்களையும், கிழக்கு பஞ்சாபிலிருந்து முஸ்லீம்களையும் விரட்டும் முயற்சியைக் கைக்கூலிகளும், இன வெறியர்களும், சமூக விரோத சக்திகளும் மேற்கொண்டனர். லாகூரில் இந்து-சீக்கியர்களின் வீ டுகள் தீக்கரையாகின, சொத்துக்கள் சூரையாடப்பட்டன, கிடங்குகளில் அடைக்கப்பட்டு முஸ்லீம் காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். கற்பழிப்புக்கஞ்சி பல பெண்கள் தீக்குளித்தனர். அதேபோன்று அமிர்தசரசில் முஸ்லீம்களின் வீ டுகள் தரைமட்டமாக்கப்பட்டன, வயல்கள் நாசமாக்கப்பட்டன, வாய்க்கால்கள் பிணங்களால் நிறைந்தன. சீக்கியர்களின் சீற்றத்திலிருந்து காப்பாற்றப் பல முஸ்லீம்கள் தங்கள் மனைவிகளையும் பெண்களையும் கொன்று விட்டனர். தற்காப்புக்காக லாகூரிலும் அமிர்தசரசிலும் முஸ்லீம்கள் சீக்கியர்களையும், சீக்கியர்கள் முஸ்லீம்களையும் கொன்று குவித்தனர். இம்மனித மிருகத்தாக்குதலிலிருந்து எந்த ஒரு நகரமும், கிராமமும், தெருவும் தப்பவில்லை . வெறுப்புக்கு இன, மத, மொழி வேறுபாடு இல்லை அல்லவா?

மேஜர் ஜெனரல் ரீஸ் (Major General Rees) தலைமையில் அமைக்கப்பட்ட பஞ்சாப் எல்லைப் படை (Punjab Boundary Force) மேற்கொண்ட 'நெருப்பணைப்பு நடவடிக்கை'யால் பஞ்சாப்படுகொலையைத் தடுக்கவோ இனக்கலவரங்களை ஒடுக்கவோ முடியவில்லை. பஞ்சாப் எல்லைப்படை இனக்கலவரத்தை எதிர்கொள்ளக்கூடிய போதிய பலம்

பெற்றிருக்கவில்லை. அதற்குக் குதிரைப் படையும் கொடுக்கப்படவில்லை. மேலும் அப்படை வீ ரர்களிடையே கட்டுப்பாடும் ஒழுங்குணர்வும் குறைந்தே காணப்பட்டது. அவர்களில் சிலர் இனக்கலவரங்களில் சார்புடையவர்களாக நடந்து கொண்டனர் என்று சந்தேகிக்கப்பட்டது. பஞ்சாபில் நிர்வாகம் முற்றிலும் சீர்குலைந்து போயிற்று. அமிர்தசரஸ் இனக்கொலைக்குப் பதிலாக லாகூரிலிருந்து அமிர்தசரஸ் சென்ற டென்-டவுன் எக்ஸ்பிரஸில் பயணம் செய்த சீக்கிய அகதிகள் அனைவரையும் கொன்று பிணமாக அனுப்பினர்.

மதவெறி மட்டும் பஞ்சாப் படுகொலைக்குக் காரணமல்ல. நிலப் பேராசையே அதற்கு அடிப்படைக் காரணம் என்று கூறுகிறார் எஸ்.கே.சின்ஹா. மேற்கு பஞ்சாப் முஸ்லீம்கள் அங்கு இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் சொந்தமான நிலங்கள், கடைகள், வீ டுகள் பிற சொத்துக்கள் அனைத்தும் தங்களுக்கே சொந்தம் என்று கருதினர். அதேபோன்று கிழக்கு பஞ்சாப் இந்துக்களும் சீக்கியர்களும் அங்கிருந்த முஸ்லீம்களை பாகிஸ்தானுக்கு விரட்டிவிட்டு அவர்களது சொத்துக்களை அபகரித்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினர். எனவே, மதமுலாம் பூசப்பட்ட சொத்தாசையே பஞ்சாப் படுகொலைக்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

**வங்காள இனக்கலவரங்கள் (Bengal Communal Riots)**

இந்தியப் பிரிவினை மீண்டும் வங்காளத்தில் இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டது. 1946 ஆகஸ்ட் 16-ம் தேதி முஸ்லீம் லீக் கட்டவிழ்த்து விட்ட நேரடி நடவடிக்கை நாளன்று பாதிக்கப்பட்ட மோசமான பகுதிகளில் ஒன்று நவகாளி. நவகாளி கங்கை - பிரம்மபுத்திரா சதுப்பு நிலப்பகுதியில் உள்ள ஸ்ரீராம்பூரில் இருக்கிறது. நாற்பது சதுர மைல் பரப்பளவேயுடைய நவகாளியில் வாழ்ந்த இரண்டரை மில்லியன் மக்களில் எண்பது விழுக்காட்டினர் முஸ்லீம்கள். மகாத்மா காந்தி நவகாளி சென்று, 'சோடேபூர் ஆசிரமம்" கொண்டிருக்கையில் சீக்கியர்கள் லாகூரில் மாஸ்டர்

தாராசிங் தலைமையில் எதிர்த்தாக்குதல் பற்றித் திட்டமிட்டனர்.

இந்தியா சுதந்திரம் பெற்றபோது மேற்கு பஞ்சாபிலிருந்து இந்து - சிக்கியர்களையும், கிழக்கு பஞ்சாபிலிருந்து முஸ்லிம்களையும் விரட்டும் முயற்சியைக் கைக்கூலிகளும், இன வெறியர்களும், சமூக விரோத சக்திகளும் மேற்கொண்டனர். லாகூரில் இந்து-சிக்கியர்களின் வீ டுகள் தீக்கரையாகின, சொத்துக்கள் சூரையாடப்பட்டன, கிடங்குகளில் அடைக்கப்பட்டு முஸ்லிம் காவல் படையினரால் கட்டுக் கொல்லப்பட்டனர். கற்பழிப்புக்கஞ்சி பல பெண்கள் தீக்குளித்தனர். அதேபோன்று அமிர்தசாசில் முஸ்லிம்களின் வீ டுகள் தரைமட்டமாக்கப்பட்டன, வயல்கள் நாசமாக்கப்பட்டன, வாய்க்கால்கள் பிணங்களால் நிறைந்தன. சீக்கியர்களின் சீற்றத்திலிருந்து காப்பாற்றப் பல முஸ்லிம்கள் தங்கள் மனைவிகளையும் பெண்களையும் கொன்று விட்டனர். தற்காப்புக்காக லாகூரிலும் அமிர்தசரசிலும் முஸ்லீம்கள் சிக்கியர்களையும், சீக்கியர்கள் முஸ்லிம்களையும் கொன்று குவித்தனர். இம்மனித மிருகத்தாக்குதலிலிருந்து எந்த ஒரு நகாமும், கிராமமும், தெருவும் தப்பவில்லை. வெறுப்புக்கு இன, மத, மொழி வேறுபாடு இல்லை அல்லவா?

மோர்ஜெணல் ரீஸ் (Near Gener Res) தலைமையில் அமைக்கப்பட்ட பஞ்சாப் எல்லைப் படை (Punjab Boundary Force) மேற்கொண்ட 'நெருப்பணைப்பு நடவடிக்கை யால் பஞ்சாப்படுகொலையைத் தடுக்கவோ இனக்கலவரங்களை ஒடுக்கவோ முடியவில்லை. பஞ்சாப் எல்லைப்படை இனக்கலவரத்தை எதிர்கொள்ளக்கூடிய போதிய பலம் பெற்றிருக்கவில்லை. அதற்குக் குதிரைப் படையும் கொடுக்கப்படவில்லை. மேலும் அப்படை வீ ரர்களிடையே கட்டுப்பாடும் ஒழுங்குணர்வும் குறைந்தே காணப்பட்டது. அவர்களில் சிலர் இனக்கலவரங்களில் சார்புடையவர்களாக நடந்து கொண்டனர் என்று சந்தேகிக்கப்பட்டது. பஞ்சாபில் நிர்வாகம் முற்றிலும்

சீர்குலைந்து போயிற்று. மதவெறி மட்டும் பஞ்சாப் படுகொலைக்குக் காரணமல்ல. நிலப் பேராசையே அதற்கு அடிப்படைக் காரணம் என்று கூறுகிறார் எஸ்.கே.சின்ஹா . மேற்கு பஞ்சாப் முஸ்லிம்கள் அங்கு இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் சொந்தமான நிலங்கள், கடைகள், வீ டுகள் பிற சொத்துக்கள் அனைத்தும் தங்களுக்கே சொந்தம் என்று கருதினர். அதேபோன்று கிழக்கு பஞ்சாப் இந்துக்களும் சீக்கியர்களும் அங்கிருந்த முஸ்லீம்களை பாகிஸ்தானுக்கு விரட்டிவிட்டு அவர்களது சொத்துக்களை அபகரித்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினர். எனவே, மதமுலாம் பூசப்பட்ட சொத்தாசையே பஞ்சாப் படுகொலைக்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

**வங்காள இனக்கலவரங்கள் (Bengal Communal Riots)**

இந்தியப் பிரிவினை மீண்டும் வங்காளத்தில் இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டது. 846 ஆகஸ்ட் 5-ம் தேதி முஸ்லிம் லிக் கட்டவிழ்த்து விட்ட நேரடி நடவடிக்கை நாளன்று பாதிக்கப்பட்ட மோசமான பகுதிகளில் ஒன்று நவகாளி, நவகாளி கங்கை - பிரம்மபுத்திரா சதுப்பு நிலப்பகுதியில் உள்ள ஸ்ரீராம்பூரில் இருக்கிறது. நாற்பது சதுர மைல் பரப்பளவேயுடைய நவகாளியில் வாழ்ந்த இரண்டரை மில்லியன் மக்களில் எண்பது விழுக்காட்டினர் முஸ்லிம்கள். மகாத்மா காந்தி நவகாளி சென்று, சோடேபூர் ஆசிரமம்

**காஷ்மீர் பிரச்னை!**

காஷ்மீரிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை அகற்றும் முயற்சியை இந்தியா கைவிட்டது. பாகிஸ்தான் அசாத் காஷ்மீரைத் தக்க வைத்துக் கொண்டது. எனவே, காஷ்மீர் விவகாரம் தீரும் வரை இந்தியா பாகிஸ்தானுக்குக் கொடுக்க வேண்டிய 'பிரிவினை இழப்பீட்டுத் தொகை'யான 55 கோடி ரூபாயைக் கொடுக்காமல் நிறுத்தி வைப்பதென்று 1948 ஜனவரி மாதம் நேருவின் அமைச்சரவை முடிவு செய்தது. அதற்குக் *கா*ரணம் பாகிஸ்தான் அந்தப் பணத்தைக் கொண்டு போர்த்தளவாடங்களை வாங்கி

இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தும் என்று அமைச்சரவை கருதியதேயாகும். ஆனால் பாகிஸ்தானின் காஷ்மீர் ஆக்கிரமிப்புக்கெதிராக இந்திய இராணுவத்தை அனுப்பியிருக்க வேண்டும் என்று கூறிய காந்தி பாகிஸ்தானுக்கு இந்தியா கொடுக்க வேண்டிய பணத்தை திறுத்தி வைப்பது நாணயமற்ற நேர்மையற்ற செயல் என்று கருதினார். எனவே 1948 ஜனவரி மாதம் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். நேருவின் அமைச்சரவை மாற்றிக் கொண்டு முழுத் தொகையையும் பாகிஸ்தானுக்குத் திருப்பிக் எந்தி உண்ணாவிரதத்தை விலக்கிக் கொண்டார். ஆனால் பாகிஸ்தான் கொண்ட அசாத் காஷ்மீரிலிருந்து விலகவில்லை. காஷ்மீர் பிரச்னை இன்று வர தீர்க்கப் இப்படாமலேயே உள்ளது

**மௌன்ட்பேட்டன் பங்கு**

இந்திய மாகாணங்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்ததில் இந்தியாவின் வைசிராயும் முதல் கவர்னர் ஜெனரலுமான லூயி மௌன்ட்பேட்டன் பிரபுவுக்குக் கக்க பங்கு உண்டு. இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பே மன்னர்களின் பிரதிநிதிகளையும் கூட்டி மன்னர்களின் ஆள் நிலப் பகுதிகள் இந்தியாவ|டனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைய வேண்டியதன் இன்றியமையாமையைக் கோடிட்டுக் காட்டினார்.

பெரும்பான்மையான மன்னர் மாநிலங்கள் இந்தியாவுடன் இணைவதற்கு பேட்டனின் முயற்சியும், அரசியல் சாதுர்யமும், நிர்வாகத் திறமையும் முக்கியக் மாகும். பேராசை கொண்ட, சுதந்திரமாக இருக்க விரும்பிய மன்னர்களைத் பச்சையாகவோ, சமாதானப்படுத்தியோ அல்லது நிர்ப்பந்தத்துக்குட்பட்டோ சம்மதிக்க வைத்ததில் மௌன்ட்பேட்டனுக்குப் பெருமைக்குரிய பங்கு உண்டு.

எனினும் ஐதராபாத் நிஜாம் மற்றும் காஷ்மீர் மகாராஜா சம்பந்தப்பட்டவரை டன் செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளானார் மௌன்ட்பேட்டன். மற்றும் மன்ங்டனின் பக்கபலத்தோடு ஐதராபாத் நிஜாம் ஒப்பந்த விதிகளை மீறி

இந்தியாவுக்கு எதிராகச் செயல்பட்டார் என்று சந்தேகிக்கப்பட்டது. அதேபோன்று ஐ.நாவில் காஷ்மீர் வெகாரம் பற்றிப் புகார் செய்யாவிடில் பாகிஸ்தானுடன் போரிடுவதைத் தவிர வேறு தியில்லை என்ற காரணத்தைக் கூறி நேருவை சம்மதிக்க வைத்தார் மௌன்ட்பேட்டன்.

போர் நிறுத்தம் மற்றும் மக்கள் வாக்கெடுப்பு உள்ளிட்ட பொதுவான பிரச்னையை ஐ.நாவின் தீர்ப்புக்கு விட வேண்டும் என்று வலியுறுத்தினார். அசாத் காஷ்மீரிலிருந்து அக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துவதை விட்டுவிட்டுக் காஷ்மீர் விவகாரத்தை ம.நாவுக்குக் கொண்டு செல்லுமாறு மௌன்ட்பேட்டன் ஆலோசனை கூறியது நேருவை திசை திருப்பிய செயலாகும். கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து விலகப் போவதாக அச்சுறுத்தி நேருவைத் தன்வழிக்குக் கொண்டு வந்தது மௌன்ட்பேட்டனின் பதவிக்கும், தகுதிக்கும் ஏற்றதாக இல்லை. காஷ்மீர் விவகாரம் இந்தியா - பாகிஸ்தான் பிரச்னையாக மாறியதற்கு மௌன்ட்பேட்டன் முக்கிய பங்கேற்றார்.

**இரும்பு மனிதர்' பட்டேல் (1875- 1950)**

வல்லபாய் பட்டேல் 1875 அக்டோபர் 21-ஆம் தேதி குஜராத்தில் ஒரு குக்கிராமத்தில் பிறந்தார். அவரது தந்தை 1857 பெருங்கிளர்ச்சியின் போது தலத் தலைவரோடு சேர்ந்து பிரிட்டிஷாரோடு போரிட்டவர். பட்டேல் குழந்தையாக இருந்தபோதே கிராமக் காற்றோடு கிளர்ச்சிக் காற்றையும் சுவாசித்தார். இளவயதில் அகமதாபாத் சென்று துணி ஆலைகளில் பணியாற்றினார். பகலில் வேலை. இரவில் படிப்பு. வக்கீல் தொழிலுக்கான ப்ளீடர் பட்டம் பெற்றார் (1900) வக்கீல் தொழில் தொடங்கினார். சிக்கனமாக வாழ்ந்து பணம் சேமித்து, தனது 33-வது வயதில் லண்டன் சென்றார். தினமும் பத்து மைல் சென்று இன்ஸ் ஆப் கோர்ட்' (Inns of Court) நூலகத்தை நன்கு பயன்படுத்தினார். சட்டக் கல்வி பயின்று பாரிஸ்டர்' பட்டம் பெற்றார் (1910). இந்தியா திரும்பிய வல்லபாய் பட்டேல்

அகமதாபாத்தில் வக்கீல் தொழிலைத் னார். தொழிலதிபர்களின் ஆதரவோடு அத்தொழிலில் வெற்றி பெற்றார். செல்வாக்கு பெற்றிருந்த வக்கில் பட்டேல், காந்தியின் பேச்சைப் படித்து அவரது லட்சியத்தில் மனதைப் பறிகொடுத்தார். காந்தியை சந்தித்துத் தன்னை தேசப்பல அர்ப்பணித்துக் கொண்டார். பட்டேலின் நாட்டுப்பற்றையும் தலைமைத் திறனையும் கண்ட காந்தி அவரிடம் நமாதோலி சத்தியாகிரகத்தை (Bardoll Satyagraha) நடத்தும் பொறுப்பை ஒப்படைத்தார். (1922). 137 கிராமங்களில் இருந்த 87,000 மக்களை ஒன்று சேர்த்து சத்தியாகிரகத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்தார் பட்டேல். பட்டேலின் அமைப்பாற்றலைப் பாராட்டி அவருக்குச் 'சர்தார்' என்ற பெயரைச் சூட்டினார் காந்தி. அன்றிலிருந்து சர்தார் வல்லபாய் பட்டேல் காந்தியின் தலைமையின் கீழ் நேருவுக்கு இணையாக இருந்து இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார்.

சர்தார் வல்லபாய் பட்டேல் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1931). தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் அமைச்சரவை அமையக் காரணமாக இருந்தார் (1937). நாடாளுமன்ற போர்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கேற்று (1942) மூன்றாண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார். நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட 'இடைக்கால அரசாங்க'த்தில் துணைப் பிரதமரானார் பட்டேல் (1946). முஸ்லீம் லீக் கட்டவிழ்த்து விட்ட 'நேரடி நடவடிக்கை'யால் ஏற்பட்ட கலவரத்தைத் துணிவுடனும் சாதுர்யமாகவும் சமாளித்தார் சர்தார் பட்டேல். மௌன்ட்பேட்டன் திட்டத்தின் இந்தியப் பிரிவினை'யைத் தீவிரமாக எதிர்த்தார். சூழ்நிலைக் கட்டாயத்தால் அத்திட்டத்துக்கு இணங்கினார்.

இந்தியா விடுதலை அடைந்தவுடன் நேருவின் அமைச்சரவையில் துணைப் பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவும் பங்கேற்றார் பட்டேல். இந்தியப் பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட இனக்கலவரங்களை எதிர்கொள்ளவும்,

இந்தியாவுக்கு வந்த பல்லாயிரக்கணக்கான அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் பட்டேல் பிரதமர் நேருவுக்கு உறுதுணையாக இருந்தார்.

மண்ணாசைமிக்க மன்னர்களுடன் கலந்து பேசி இந்தியாவுடன் இணைவதற்கு அவர்களது இசைவிணக்கத்தைப் பெற்றார். ஐதராபாத் நிஜாம் போர்க்கொடி உயர்த்திய போது குருதி கொட்டியாவது இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றத் துணிந்தார் பட்டேல். ஐதராபாத் இணைப்புப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு' காணவேண்டும் என்ற நேருவின் அணுகுமுறையிலிருந்து மாறுபட்டார். இப்பிரச்னையை இந்தியாவின் காஷ்மீர் கொள்கையின் பகுதியாகப் பார்த்தார் நேரு. ஆனால் பட்டேல் இதை இந்தியாவின் உள் நாட்டுப் பிரச்னையாகக் கருதினார்'. பட்டேல் இந்திய இராணுவத்தின் துணைகொண்டு ஐதராபாத்தை இந்தியாவுடன் இணைத்தார். அதேபோன்று ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதற்கு இராணுவத் தீர்வையே விரும்பினார் பட்டேல். சமகால இந்தியாவில் மன்னர் மாநிலங்களை இந்தியாவுடன் இணைத்தது இணையற்ற 'இரத்தம் சிந்தாப் புரட்சி' ஆகும். ஐரோப்பிய வரலாற்றில் ஜெர்மனி மற்றும் இத்தாலிய ஐக்கியத்திர்க்குக் காரணமான பிஸ்மார்க், கவூர் ஆகியோரோடு ஒப்பிடப்பட்டார் பட்டேல். சர்தார் வல்லபாய் பட்டேல் 'இந்தியாவின் இரும்பு மனிதர் பிஸ்மார்க்' என்று போற்றப்பட்டார். நேரு பட்டேலை 'நவ இந்தியாவை நிர்மானித்தவர்' என்று பெருமையோடும் பெருந்தன்மையோடும் வர்ணித்தார்.

**UNIT-II**

# நேருவின் தொலைநோக்கு: சமுதாயத்தில் புதிய போக்குகள்

## நேருவின் தொலைநோக்கு (Nehru's Vision)

ஜவஹர்லால் நேரு அரசியல் தொலைநோக்குடைய கற்பனாவாதி; எதிர்கால இந்தியாவைப் பற்றிய இலட்சியத்தைக் கொண்ட யதார்த்தவாதி. கடந்த காலத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவுடன் நிகழ்காலத்தில் காலூன்றி வருங்காலத்தில் சிறகடித்துப் பறந்தவர். அதனால் தான் நேரு இந்தியாவை ஒரு புவியியல் அமைப்பாக மட்டும் பார்க்காமல் ஒரு கருத்தாக, கனவாக, கற்பனையாக, கவிதையாகக் கண்டார். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இந்தியா முரண்பாடுகளின் முடிச்சாகத் தோன்றும்; ஆழ்ந்து நோக்கினால் இந்நாடு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இடையறாது ஓடிக் கொண்டிருக்கும் வற்றாத ஒற்றுமை ஜீவநதியாகக் காட்சியளிக்கும்! நேரு வேற்றுமையில் ஒற்றுமை'யைப் பார்த்தவர். மற்றவர்கள் மரங்களைப் பார்த்துக் கொண்டிருந்த போது நேரு மரங்களையெல்லாம் கடந்த 'கானகக் காட்சி'யைக் கண்டார். "இந்தியா அழித்து எழுதத்தக்க தொன்மையான வரைவு மூலப் பொருள் போன்றது" (India was like an ancient Palimset..) என்று எழுதினார் நேரு.

## இந்திய ஒற்றுமை

இந்தியா பல்வேறு கலாச்சாரங்களின் பல்வண்ணக் கலவை என்பது நேருவின் நெஞ்சத் தெளிவாகும். இந்தியத்துவம் (Indianness) - இந்துத்துவா (Hindutuva)வல்ல -

தான் இந்தியாவின் தனித்தன்மை என்பது நேருவின் கணிப்பு. அதாவது இந்தியா இந்தியர்களின் நாடு - இந்துக்களின் நாடு மட்டுமல்ல - இந்தியர்களின் நாடாக இருக்க வேண்டும் என்பதில் இறுதிவரை உறுதியாக இருந்தார் நேரு. இந்துக்கள் தான் இந்தியர் என்ற நச்சுவாதத்தை அவர் நிராகரித்தார். எவ்வாறு தண்ணீரைப் பிரிக்க முடியாதோ அதேபோன்று பல கலாச்சாரங்களை உள்ளடக்கிய இந்தியாவையும் இனிப் பிரிக்க முடியாது என்பது நேருவின் உள்ளத்து உறைப்பாகும்.

## ஜனநாயகமே ஜீவநாடி

நேரு அறிவாலும், உள்ளத்தாலும், உணர்வாலும் ஒரு ஜனநாயகவாதி. நேரு சுதந்திரத்தின் உருவகம்; உரிமைகளின் ஊடகம். அதனால் தான் அவர் ஜனநாயகமே சுதந்திர இந்தியாவின் ஜீவநாடி என்று எண்ணி செயல்பட்டார். மக்களுக்கு எவ்வித முன் நிபந்தனையுமின்றி வாக்குரிமை வழங்கப்பட்டது. பொதுத்தேர்தல்கள் மூலம் மக்களாட்சி நிறுவனங்கள் பலப்படுத்தப்பட்டன. ஜனநாயகம் நாடாளுமன்றத்திலிருந்து கிராமப் பஞ்சாயத்து வரை விரிவுபடுத்தப்பட்டது. ஜனநாயகப் பற்றுறுதியின் காரணமாக நேரு மக்களை நேசித்தார்; மக்கள் நேருவை நேசித்தனர்.

## சோஷலிசத் தீர்வு

சாதாரண மக்களின் பொருளாதார சுதந்திரமே அவர்களது அரசியல் சுதந்திரத்துக்கான அடித்தளம் என்பது நேருவின் நம்பிக்கையாகும். மக்களுக்கு வாக்குரிமை கொடுத்தால் மட்டும் போதாது; அவர்கள் பொருளாதார வளர்ச்சியிலும் பங்கேற்க வேண்டும் என்று விரும்பினார் நேரு. 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற காந்தியின் கனவை நனவாக்க நினைத்தார். எனவே சுரண்டல் முதலாளித்துவத்தையும் அடக்குமுறை கம்யூனிசத்தையும்

விலக்கி சோஷலிசப் பாதையில் பயணிக்கத் துணிந்தார் நேரு. தன்னிறைவு தற்சார்பு திட்டமிட்ட பொருளாதாரத்தின் மூலமே இது சாத்தியமாகும் என்ற முடிவுக்கு வந்தார் நேரு. அரசியல் போராட்டத்தின் மூலம் நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தந்ததைப் போன்று பொருளாதாரச் சுரண்டலிலிருந்து மக்களைக் காப்பாற்றும் பொறுப்பை தந்தை அல்லது தர்மகர்த்தா நிலையிலிருந்து அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்பது நேருவின் துணிவு. சோஷலிசம் சமத்துவ சமுதாயத் (Eqalitarian Society)தை அடைவதற்கான மார்க்கமேயன்றி முடிவல்ல.

**சமயச் சார்பின்மை**

அரசியல் - பொருளாதார - சமுதாய சமத்துவம் நிலைப்பெற வேண்டுமாயின் சமய சமத்துவம் இன்றியமையாதது. சமயம் தனி மனித நம்பிக்கையைப் பொறுத்தது. சமய சமத்துவம் பொதுவாழ்க்கை சம்மந்தப்பட்டது. அரசாங்கம் எந்த ஒரு சமயத்தையும் சாராமல் இருந்தால் தான் பொதுவாழ்வில் சமய சமத்துவத்தை நிலைநாட்ட முடியும். எடுத்துக்காட்டாக, இந்து மதம் இந்துக்களின் சமயமேயன்றி இந்தியர்களின் சமயமன்று. இந்து மதம் தான் இந்திய மக்களின் சமயமாக இருக்க வேண்டும் என்பது சமயப் பொறையின்மையாகும்; சமய அடிப்படைவாதமாகும்; சமயத் தீவிரவாதமாகும். எனவே, ஒருசாராரின் - அவர்கள் பெரும்பான்மையினராக இருந்தாலும் மத நம்பிக்கையைப் பிறர் மீது - அவர்கள் சிறுபான்மையினராக இருப்பினும் - திணிப்பது இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவித்துவிடும் என்பது நேருவின் தெளிவான நோக்கமாகும். அதனால் தான் நேரு இந்தியரை மக்களாக, குடிமக்களாக, மனிதாபிமானமிக்க மனிதர்களாகப் பார்த்தாரேயன்றி, இந்துக்களாகவோ, முஸ்லீம்களாகவோ, கிறித்துவர்களாகவோ பார்க்கவில்லை. சமயம் மக்களைப் பிரிக்கும் இயல்புடையது. சமயச்

சார்பின்மை மக்களை இணைக்கும் குணமுடையது. நேருவின் சமயச் சார்பின்மை இனம், மதம், மொழி, பிராந்திய வேறுபாடுகளைக் கடந்து மக்களை ஒன்று சேர்க்கும் தன்மை பெற்றது.

**நவீனமயமாக்கல்**

இந்தியா பாரம்பரியமிக்க பழமையான நாடு. பழைய இந்தியாவைப் புதிய இந்தியாவாக உருமாற்றம் செய்ய வேண்டும் என்பது நேருவின் நினைப்பாகும். நவீனமயமாக்கி (Modernisation)னால் மட்டுமே இது சாத்தியமாகும். இதற்கான ஒரே வழி அறிவியல் - தொழில் நுட்பத்தின் மூலம் பிற்போக்கு சமுதாயத்தை முற்போக்கு சமுதாயமாக்கும் முயற்சியை முனைப்புடன் மேற்கொண்டார் நேரு. இதற்கு இரண்டு முன் தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்; 1) மக்களின் மனப்பான்மை மாற்றம். படித்தவர்களும் பழமைவாத மூட நம்பிக்கைகளிலும், நடவடிக்கைகளிலும் திளைத்திருக்கும் போது நாட்டு மக்களின் மனமாற்றமின்றி நவீனமயமாக்கல் சாத்தியமில்லை. எனவே அறிவியல் உணர்வு (Scientific Tempar) மக்களிடையே ஏற்பட வேண்டியது இன்றியமையாதது என்றார் நேரு. 2) அறிவியல் கல்வி. அறிவியல் கல்வியின் மூலமே மக்களிடையே அறிவியல் உணர்வை ஏற்படுத்த முடியும் என்று எண்ணிய நேரு அறிவியல் - தொழில்நுட்பக் கல்லூரிகளையும், நிலையங்களையும், ஆராய்ச்சி நிறுவனங்களையும், ஹோமி பாபா, விக்ரம் சாராபாய் போன்ற விஞ்ஞானிகளையும் வெகுவாக ஊக்குவித்தார். நவீனமயமாக்கல் மூலம் இந்தியாவை தொழில்மயமான முன்னேறிய நாடாக்க வேண்டுமென்பதே நேருவின் தொலைநோக்காகும். நேருவின் தொலைநோக்கே அவர் சமகால இந்தியாவுக்கு விட்டுச் சென்ற நன்கொடையாகும்.

**சமுதாய உருமாற்றம் (Social Transformation)**

நாடாளுமன்ற ஜனநாயகம், திட்டமிட்ட பொருளாதாரம், சமுதாயச் சீரமைப்பு ஆகியவை ஜவஹர்லால் நேருவின் முப்பெரும் அரசியல், பொருளாதார, சமூகக் குறிக்கோள்களாக இருந்தன. இந்திய அரசியலமைப்புச் சட்டமும், ஐந்தாண்டுத் திட்டங்களும் முதலிரண்டு குறிக்கோள்களுக்கும் செயல்வடிவம் கொடுத்தன. அதேபோன்று சமூக நீதிக் கொள்கை (Policy of Social Justice) மூலம் சமுதாய உருமாற்றத்துக்கான வழி வகுக்கப்பட்டது. 'சமூக நீதி ' ஜனநாயகத்தின் ஜீவன். பொருளாதார வளர்ச்சியின் சாரம். பொருளாதாரச் சுரண்டலும் சமூகச் சீர்கேடுகளும் களையப்பட்டு, சட்டத்துக்கு முன் அனைவரும் சமமாக நடத்தப்பட்டு, சமுதாய சமத்துவம் நிலைநாட்டப்படும் போது தான் சமூக நீதி பொருளுடையதாகிறது. அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்கப்படும் போது தான் சமூக நீதி நினைவு நிஜமாகிறது. இந்திய சமுதாயத்தின் முகத்தையே மாற்றி அமைப்பதன் மூலம் சமூகச் சீரமைப்பைச் செய்ய முடியும் என்று உறுதியாக நம்பினார் நேரு. எனவே, மக்களின் மனப்பான்மையிலும், நோக்கிலும், போக்கிலும் உணர்வுகளிலும், விருப்பங்களிலும், பழக்கவழக்கங்களிலும் அடிப்படை மாற்றங்களைக் காண விரும்பினார். அதன் விளைவாக இந்திய சமுதாயத்தில் சில புதிய போக்குகளை (New Trends in Indian Society)க் காண முடிந்தது.

**சமுதாயக் கொள்கை (Social Policy)**

1947 ஆகஸ்டு 15 ஆம் தேதி நாடு விடுதலை அடைந்த போது அரசாங்க அதிகாரம் ஆங்கிலேயர்களால் இந்தியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த அதிகாரத்தைக் கொண்டு இந்திய சமுதாய அமைப்பை மாற்றி அமைக்க முடிவு செய்தார் நேரு. அதற்குப் பொருளாதார வளர்ச்சி

மட்டும் போதாது என்பதை உணர்ந்தார். எனவே நேரு சமுதாயத்தை நவீனமயமாக்கும் (Modernisation of Society) முயற்சியில் ஈடுபட்டார். அப்போது தான் இந்தியா நாகரிக நாடாக முடியும். இந்தியர்கள் அறிவொளிமிக்க, தன்னம்பிக்கையுடைய, சுயமரியாதை உணர்வுடைய மக்களாவர். இத்தகைய உயரிய நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதே நேரு அரசாங்கத்தின் புதிய சமுதாயக் கொள்கையாகும்.

சமுதாய சமத்துவம் (Social Equality) சமுதாயக் கொள்கையின் குவிமையமாகும். சமுதாய சமத்துவத்தின் மூலமே சமுதாயப் புரட்சி (Social Revolution)யை ஏற்படுத்த முடியும். சமுதாய சமத்துவக் குறிக்கோளை நடைமுறைப்படுத்தும் நோக்கோடுதான் நேரு அரசாங்கம் சமுதாயக் கொள்கையை வகுத்தது. விவசாயிகள் விடுதலை, பெண்கள் சுதந்திரம், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் ஆகியவை சமுதாயப் புரட்சிக்கான வழிகளாகக் கொள்ளப்பட்டன. சுருங்கக்கூறின், சமுதாயக் கொள்கை சமுதாய உருமாற்றத்துக்கான கலங்கரை விளக்கமாகும்.

### மாநிலங்கள் மறுசீரமைப்பு

மாநிலங்கள் மறுசீரமைப்பு (State's Reorganisation) சமகால இந்தியாவின் தலையாய சவால்களில் ஒன்றாகும். இந்தியப் பிரிவினை, மன்னர் மாநிலங்கள் இணைப்பு, அரசியலமைப்புச் சட்ட உருவாக்கம், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி ஆகிய சவால்களை எதிர்கொண்ட நேரு அரசாங்கம் மாநிலங்கள் மறுசீரமைப்புப் பிரச்னையையும் சந்திக்க வேண்டியதாயிற்று. அதற்குக் காரணம் மன்னர் மாநிலங்கள் இந்தியாவுடன் இணைக்கப்பட்ட பின் உருவான 'அரசியல் பகுதிகள்' (Political Units) பரப்பளவும், மக்கள் தொகையும், பொருளாதார வளர்ச்சி நிலையிலும் பெரிதும்

வேறுபட்டிருந்தன. தற்காலிகமானவை. அதுமட்டுமல்ல. பல பகுதிகள் பல மொழிகளைப் பேசுவோரைக் கொண்டிருந்தன. எனவே, இந்திய மாநிலங்களின் எல்லைகளை அறிவுப்பூர்வமாக, நடைமுறை சாத்தியமாக, மக்களின் எதிர்பார்ப்புகளை மனதில் கொண்டு மறுசீரமைப்பு செய்ய வேண்டியது இன்றியமையாததாயிற்று.

**மொழிவழி மாநிலக் கோரிக்கை**

ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய மண்ணில் காலூன்றிய பின்னர் ஆங்கில மொழியின் செல்வாக்கு படிப்படியாக வளர்ந்தது. அரசாங்க அலுவலகங்களில் இந்தி மற்றும் உருது மொழிகளின் செல்வாக்கு குறையலாயிற்று. காலப்போக்கில் ஆங்கிலம் இந்தியாவின் இணைப்பு மொழி (Link Language) ஆயிற்று. மேலும் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் நிர்வாக வசதிக்காக மாநிலங்களைப் பிரித்தனர். 1919 வரை பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் ஒற்றையாட்சி (Unitary Form of Government) அமைப்பாக இருந்ததால் அவ்வாறு பிரிப்பது எளிதாயிற்று. அப்படிப் பிரித்தால் இந்திய தேசிய ஒற்றுமை சக்தியைப் பிரித்தாளும் (Divide and Rule) உத்தியால் பலமிழக்கச் செய்வதற்கும் வசதியாக இருந்தது. விடுதலைப் போராட்டத்தின் விளைவாக இந்தியர்களிடையே அரசியல் விழிப்புணர்வு ஏற்படவே அவர்கள் நிர்வாகத்தில் பங்கேற்க விரும்பினர். மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கோரினர். எனவே, மாண்டேகு- செம்ஸ்போர்டு அறிக்கையும், சைமன் கமிஷனும் மொழி மற்றும் இனக் காரணிகளின் அடிப்படையில் மாகாணங்கள் மாற்றி அமைக்கப்படலாம் என்ற யோசனையைத் தெரிவித்தனர்.

இந்திய தேசிய காங்கிரஸ் மொழிவழி மாநில அமைப்பு முடிவை 1908-லேயே ஏற்றுக் கொண்டது. அக்கருத்தின் அடிப்படையில் தான் 1911-ல் பீகார் வங்காளத்திலிருந்து பிரிக்கப்பட்டது. 1920-ம் ஆண்டில் நாக்பூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் இந்திய மாகாணங்கள் பிராந்திய மொழிகள் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. நாக்பூர் காங்கிரஸ் தீர்மானத்தின்படி நிர்வாக வசதிக்காக உருவாக்கப்பட்ட அரசியல் பகுதிகளுக்குப் பதிலாக மொழி வழி மாகாணங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கொள்கை கருத்து வேறுபாடின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது. மகாத்மா காந்தியும் மொழிவழி மாகாண அமைப்பைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். 1928-ல் நியமிக்கப்பட்ட மோதிலால் நேரு கமிட்டியும் மொழிவழி மாகாணக் கோரிக்கையைக் கோடிட்டுக் காட்டியது. அதுமட்டுமல்ல. மாகாண காங்கிரஸ் கமிட்டிகளும் மொழிவழி மாற்றி அமைக்கப்பட்டன. அவ்வாறு அமைக்கப்பட்டதுதான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி' ஆகும். எனவே, இந்தியா விடுதலை அடையும் வரை மொழிவழி மாநிலக் கோரிக்கையே காங்கிரசின் கொள்கையாக இருந்தது.

**மொழிவழி மாநிலங்கள் கமிஷன், 1948**
**(The Linguistic Provinces Commission)**
**தார் கமிஷன்**

இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றம் தேசிய மொழிப் பிரச்னை பற்றி விவாதித்த போது மொழி வழி மாகாண மறு சீரமைப்பு கோரிக்கை தலை தூக்கியது. சட்ட உறுப்பினர்களில் சிலர் மொழிவழி மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். அதுமட்டுமல்ல. அத்தகைய மறுசீரமைப்பு பற்றி அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே தீர்மானிக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். எனவே அரசியலமைப்புச் சட்ட மன்றத்

தலைவர் ராஜேந்திர பிரசாத் மாகாணங்கள் மறுசீரமைப்புக் கமிஷனை நியமித்தார் (1948).

ஓய்வு பெற்ற அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.கே.தார் (S.K.Dar) அக்கமிஷனின் தலைவர். ஓய்வுபெற்ற ஐ.சி.எஸ். அதிகாரி டாக்டர் பன்னாலாலும், அரசியலமைப்புச் சட்டமன்ற உறுப்பினர் ஜகத் நாராயணன் பிற அங்கத்தினர்கள். சட்ட தார் கமிஷன் (Dar Commission) மொழிவழி மாகாணங்கள் அமைக்கப்படுவது பற்றியும், அவ்வாறு மறுசீரமைப்பு ெசய்வதால் ஏற்படக் கூடிய நிர்வாக, நிதி மற்றும் பிற விளைவுகள் பற்றியும் பரிசீலித்து தார் கமிஷன் மாநிலங்களின் கருத்தறிய நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. அது சென்ற இடங்களிலெல்லாம் மொழிவழி மாகாண மறுசீரமைப்பு பற்றிய கோரிக்கை பலமாக இருந்தது. அதே போன்று சிலர் மொழிவழி மாகாணங்களை மாற்றி அமைப்பதைக் கடுமையாக எதிர்த்தனர். மொழியை அடிப்படையாகக் கொண்டு மாகாணங்களின் எல்லைகளை மாற்றி அமைப்பதை ஆதரித்தும் எதிர்த்தும் 'கருத்துக் குறிப்புகள்' (Memorandum) அக்கமிஷனிடம் கொடுக்கப்பட்டன. தார் கமிஷன் பொது விசாரணைகள் மூலமாகவும் தகவல்களைத் திரட்டின.

1948 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்பே தார் கமிஷன் அதன் அறிக்கையை சமர்ப்பித்தது. உடனடியாக மொழிவழி மாகாணங்கள் மறுசீரமைக்கப்படுவது விரும்பத்தக்கதல்ல, என்று கருதியது அக்கமிஷன். அதற்குக் காரணம் இந்தியா கடுமையான பொருளாதார நெருக்கடிக்கும், அந்நிய ஆக்கிரமிப்புக்கும், இனக் கலவரங்களுக்கும் இலக்காயிருந்ததேயாகும். மேலும் மன்னர் மாநிலங்கள் இந்தியாவுடன் உறுதியாக இணைக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியது தார் கமிஷன். மேலும் மொழிவழி மாகாண மறுசீரமைப்பால் ஏற்படக்கூடிய

பொருளாதார நிர்வாகச் செலவுகளைத் தாங்கக் கூடிய நிலையில் நாடு இல்லை என்று கருதியது அக்கமிஷன்.

அரசியலமைப்புச் சட்டமன்றத்தில் தேசிய மொழிக் கொள்கை விவாதிக்கப்பட்டதும், அதன் விளைவாக தார் கமிஷன் நியமிக்கப்பட்டதும் நாட்டில் மொழிவழி மாகாணங்கள் மறுசீரமைப்பு பற்றிய சர்ச்சையை தீவிரப்படுத்தியது. தனி ஆந்திர மாநிலக் கோரிக்கை புது பலம் பெற்றது அச்சூழ்நிலையில் தார் கமிஷன் மொழிவழி மாகாண பிரிக்கப்படுவதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தது. எனினும், சில மாகாணங்க நிர்வாகக் காரணங்களுக்காக மாற்றியமைக்கலாம் என்று பரிந்துரைத்தது.

ஒன்றுபட்ட உறுதியான இந்தியாவைக் காண விரும்பிய பிரதமர் நேரு மொழிவழி மாகாண மறுசீரமைப்புக்கு முன்னுரிமை தரவில்லை. கமிட்டியையும் கமிஷனையும் நியமித்து மொழிவழி மாகாணச் சீரமைப்புப் பிரச்னையை ஒத்திவைப்பதில் குறியாக இருந்தார் நேரு. மொழிவழி மாகாணங்களை அமைப்பது பற்றி முடிவெடுப்பதில் தொடர்ந்து பலவீனம் நிலவியதாகக் கருதுகிறார் எஸ்.கோபால். மொழிவழி மாகாணச் *சீர*மைப்பில் காந்திக்கு இருந்த ஆர்வம் நேருவுக்கு இல்லை என்பது ஸ்டான்லி வால்பெர்ட்டின் கருத்து.

**ஜே.வி.பி. கமிட்டி (J.V.P.Committee), 1948**

தார் கமிஷன் அன்றி மொழிவாரி மாநிலங்களை அமைப்பது பற்றிப் பரிசீலிக்க காங்கிரஸ் கட்சியும் ஒரு கமிட்டியை அமைத்தது (டிசம்பர் 1948). அக்கமிட்டியில், 1) ஜவஹர்லால் நேரு, 2) வல்லபாய் பட்டேல், 3) பட்டாபி சீத்தாராமய்யா ஆகியோர் இடம் பெற்றனர். இக்குழு இவர்களது பெயர்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டு ஜே.வி.பி.என்று அறியப்பட்டது.

ஜே.வி.பி. கமிட்டி இந்தியாவை மொழிவழி பிரிப்பதற்குச் சில அளவுகோல்களை நிர்ணயித்தது:

1) இந்திய தேசிய காங்கிரஸ் மொழிவழி மாகாணக் கொள்கையை ஏற்றுக் கொண்டபோது அக்கொள்கையின் நடைமுறை விளைவுகளை எதிர்கொள்ளவில்லை. எனவே மொழிவழி மாகாணங்களை அமைப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

2) இந்தியாவின் பாதுகாப்பு, ஒற்றுமை, பொருளாதார வளம் ஆகியவை முன்னுரிமை பெற வேண்டும். பிரிவினை சக்திகளுக்குப் பின்னடைவு ஏற்பட வேண்டும்.

3) மொழி மக்களை ஒன்று சேர்ப்பதைப் போன்று பிரிக்கவும் செய்யும். எனவே, மொழியை மட்டும் அளவுகோலாகக் கொண்டு மாகாணங்களை மறுசீரமைப்பு செய்வது பொருந்தாது.

4) மொழிவழி மாகாணம் பற்றிய காங்கிரஸ் கொள்கை நாட்டின் அரசியல், பொருளாதாரப் பாதுகாப்புக்கு ஊறு நேரா வண்ணம் மிகவும் கவனமாக ஒவ்வொரு கோரிக்கையையும் நன்று பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டும்.

எனவே மொழிவழி புதிய மாகாணங்களை அமைப்பதைச் சில ஆண்டுகளுக்காவது தள்ளிப்போட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது ஜே.வி.பி.கமிட்டி. இம்முடிவு காங்கிரஸ் இந்தியா விடுதலை அடைவதற்கு முன் தீவிரமாகப் பின்பற்றி வந்த மொழிவழி மாகாணக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். மொழிவழி மாகாணங்கள் கமிஷன் அறிக்கையும், ஜே.வி.பி.கமிட்டியின் முடிவும் மொழிவழி மாகாண மறுசீரமைப்பு கோரியவர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது.

பிரதமர் நேரு மொழிவழி மாகாண மறுசீரமைப்பை ஒத்திப் போடுவதில் குறியாக இருந்தார். கமிஷனையும்,

கமிட்டியையும் அமைப்பதே அதற்குச் சிறந்த வழி என்று கருதினார். ஜே.வி.பி. கமிட்டியின் அறிக்கையை அவரே வரைந்தார். கட்சியின் அறிக்கையை அரசாங்கத்தை ஏற்கச் செய்தார். மொழிவழி மாகாண அமைப்பைப் பத்து ஆண்டுகளுக்காவது தள்ளிப் போட விரும்பினார். அவரது விருப்பத்துக்கேற்ப அரசியலமைப்புச் சட்டமன்றமும் மொழிவழி மாகாண அமைப்பைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறியது (3வது சரத்து). நேரு தனது அதிகாரத்தையும், செல்வாக்கையும் பயன்படுத்தி காங்கிரஸ் கமிட்டியும், நாடாளுமன்றக் கட்சியும் மொழிவழி மாகாணக் கோரிக்கையை வற்புறுத்த வேண்டாம் என்று கூறிவிட்டார்.

**நேருவின் நிலை**

இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது மொழிவழி மாநிலக் கோரிக்கை அகில இந்திய காங்கிரசின் கொள்கையாக இருந்தது. நாடு சுதந்திரம் பெற்றவுடன் பிரிவினையின் விளைவாக ஏற்பட்ட இனக்கலவரங்கள் தேசிய ஒருமைப்பாட்டைக் குலைத்திடுமோ என்ற எண்ணம் நேருவுக்கு எழுந்தது. 1950க்கும் 1956க்குமிடையே மொழிவழி மாநிலப் போராட்டங்கள் பல கட்டங்களில் பல வடிவங்களில் வெளிப்பட்டன. தெலுங்கு, மலையாள, மராத்தி, பஞ்சாபி மாநிலக் கோரிக்கைகளால் தேச ஒற்றுமைக்கு ஊறு உண்டாகிவிடுமோ என்று நினைத்தார் நேரு. வடக்கு வங்கத்திலிருந்து நேப்பாளி மொழிபேசும் மக்கள் தனி மாநிலம் கோரியது அவரது சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாக இருந்தது.

நாட்டு ஒற்றுமைக்கு முன்னுரிமை கொடுத்த நேரு தேசிய ஒருமைப்பாட்டுக்கும் மொழி வழி மாநிலக் கோரிக்கைக்குமிடையே நடுவழிகாண விழைந்தார். ஒரு மாநில மக்கள் மற்றொரு மாநிலத்துக்குச் சென்று குடியேறும்

உரிமை உள்ளதால் பலமொழி பகுதிகள் இருக்கவே செய்யும் என்று கூறினார் நேரு. அதுமட்டுமல்ல. மொழி, மதம், சாதித் தடைகள் இல்லாமல் இருந்தால் தான் தேசிய மனப்பான்மையும் பொதுமைப் பண்பாடும் பலப்படும் என்பது நேருவின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது. மேலும் இந்தியா நிர்வாகப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டால் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் மூலம் நவீனமயமாக்கல் விரைவுபடுத்தப்படும் என்று வாதிட்டார் நேரு. இவைபற்றியெல்லாம் விவாதித்துப் பொதுக்கருத்தை உருவாக்க அவருக்கு அவகாசம் தேவைப்பட்டது. எனவே, நேரு மொழிவழி மாநிலக் கோரிக்கையை தள்ளிப் போடப் பார்த்தார்; நிராகரிக்கவில்லை.

**ஆந்திர மாநிலம் அமைக்கப்படல், 1953**

**எதிர்பார்ப்பு**

சென்னை ராஜதானியிலிருந்த தெலுங்கர்கள் 1917-லிருந்தே தனி ஆந்திர மாகாணக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். 1946 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட காங்கிரஸ் தேர்தல் அறிக்கை (Election Manifesto)யில் இந்திய மாகாணங்கள் மொழி மற்றும் கலாச்சார அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே, நாடு விடுதலை அடைந்தவுடன் ஆந்திர மாநிலம் அமைக்கப்படும் என்று ஆந்திரர்கள் ஆவலோடு எதிர்பார்த்தனர். பிரகாசம், ரங்கா போன்ற பல ஆந்திரத் தலைவர்கள் துணைப் பிரதமரும் உள்துறை அமைச்சராகவும் இருந்த வல்லபாய் பட்டேலை சந்தித்து ஆந்திர மாநிலம் அமைக்கப்பட வேண்டுமென்பதை வற்புறுத்தினர். 1947-ல் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சென்னை மாகாண முதலமைச்சரானவுடன் தனி ஆந்திர மாநிலக் கோரிக்கை புதுப்பலம் பெற்றது. 1947 நவம்பர் 27-ஆம் தேதி மொழிவழி மாகாணக் கொள்கையை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தார் பிரதமர் நேரு. எனவே, ஆந்திர மாநிலம் 1948 ஏப்ரல் மாதத்துக்குள் அமைக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்த்தனர் ஆந்திர மக்கள்.)

## நேருவின் ஆட்சிக் காலத்தில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி (1951-1964)

ஜவஹர்லால் நேரு சுதந்திர இந்தியாவின் "திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் தந்தை" என்று போற்றப்படுகிறார். நேருவின் ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் இந்திய பொருளாதார வளர்ச்சிக்கான உறுதியான அடிப்படையை அமைத்துக் கொடுத்தது. நாடு பல முனைகளிலும் முன்னேறுவதற்கான உந்துதலைத் தந்தது. திட்டச் சாதனைகள் வருமாறு

## விவசாய வளர்ச்சி

“விவசாயம் இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு" எனலாம். இந்தியா விடுதலை அடைந்த போது 83 விழுக்காடு விவசாய நிலம் நிலையற்ற மழையை நம்பியே இருந்தது. சில பகுதிகள் வெள்ளத்தாலும், வேறு சில பகுதிகள் வறட்சியாலும் வாடும் நிலை நீடித்தது. கிடைத்த நீர் வளத்திலும் 6 விழுக்காடு தான் பாசனத்துக்கும், மின்சார உற்பத்திக்கும் பயன்படுத்தப்பட்டது. எனவே, நேரு அரசாங்கம் நீர்பாசனத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்தது. அதன் விளைவாகப் பல்வேறு பெரிய, மத்தியதர, சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக பக்ரா நங்கல் (பஞ்சாப்), ரிஹாண்ட் (உத்திரப்பிரதேசம்), தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் (பீகார் - மேற்கு வங்காளம்), ஹிராகுட் (ஒரிசா), கோசி (பீகார்), மயூரா (பீகார் - மேற்கு வங்காளம்), நாகார்ஜூனா சாகர் (ஆந்திரப் பிரதேசம்), சம்பல் (ராஜஸ்தான் - மத்திய பிரதேசம்), கீழ் பவானி (தமிழ்நாடு), துங்கபத்ரா (ஆந்திரப்பிரதேசம் - கர்நாடகம்) ஆகிய நீர்ப்பாசனத் திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இவற்றால் நீர்ப்பாசன விவசாயம் இருமடங்காகப் பெருகியது. 46

மில்லியன் ஏக்கருக்கு நீர்ப்பாசனம் விரிவுபடுத்தப்பட்டது. அதன் விளைவாக விவசாயப் பொருள் உற்பத்தி 50.83 மில்லியன் டன்னிலிருந்து (1951) 88.40 மில்லியன் டன்னாக உயர்ந்தது (1965).

விவசாயப் பெருக்கத்தோடு கால்நடை அபிவிருத்தி, கோழிப் பண்ணை , மீன்பிடிப்பு பால் உற்பத்தி போன்ற விவசாயத் துணைத் தொழில்களும் வளர்ந்தன. விவசாயக் கடன் வழங்கல், உணவுப் பொருள் பதனம் செய்தல், சந்தையிடுகை, விவசாய விஞ்ஞான முறை போன்ற நடவடிக்கைகளில் கூட்டுறவு சங்கங்கள் முனைப்புடன் ஈடுபட்டன. 1951 ஆம் ஆண்டில் 1,00,000க்கும் மேற்பட்ட 4.4 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட ஆரம்ப விவசாய மற்றும் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் துவக்கப்பட்டன. 1964-ல் இவற்றின் எண்ணிக்கை இருமடங்காகவும், உறுப்பினர் எண்ணிக்கை ஐந்து மடங்காகவும் அதிகரித்தது. கூட்டுறவு விவசாயப் பரிசோதனைத் திட்டங்கள் (Pilot Projects) அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றின் மூலம் சிறு விவசாயிகள் கூட விவசாய வளங்களை ஒருங்கிணைத்துப் பயன்பெற்றனர்.

**கிராம வளர்ச்சி**

கிராம வளர்ச்சிக்காக விவசாயத்துக்கு அடுத்தபடியாக கிராமத் தொழில்களுக்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டது. கிராம மக்களின் வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் நோக்கத்தோடு கைத்தறி, கதர், பட்டு, கயிறு, கைவினைப் பொருள்கள் உற்பத்திக்காகக் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாகக் கைத்தறித் துணி உற்பத்தி 1951-ல் இருந்ததைவிட மூன்றாவது திட்டக் காலத்தில் மூன்று மடங்காகப் பெருகியது. அதுமட்டுமல்ல. கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் மின்சார வினியோகம் செய்வதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 1951-ல் 3,687 கிராமங்கள் - நகரங்கள் மட்டுமே மின்சார வசதி

பெற்றிருந்தன. மூன்றாவது திட்டக் காலத்தில் இவற்றின் எண்ணிக்கை 55,000 ஆக அதிகரித்தது. இவற்றோடு கிராம சுகாதாரத்தைப் பாதுகாக்க 5,000 ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Primary Health Centres) துவக்கப்பட்டன. இவை மருத்துவ வசதி, தாய் - சேய் நலம், சுகாதாரக் கல்வி, தொற்றுநோய்க் கட்டுப்பாடு, சூழ்நிலை சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தின.

**தொழில் வளர்ச்சி**

விவசாய வளர்ச்சியும் தொழில் வளர்ச்சியும் இந்தியப் பொருளாதாரத்தின் இரண்டு கண்கள் போன்றவை. இவை இரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை. விரைவான தொழில்மயமாதல் விவசாய வளர்ச்சியை விரைவுபடுத்தும். இருக்கும் தொழில்களை விரிவுபடுத்தல் மற்றும் புதிய தொழில்களைத் துவங்குவதன் மூலம் விவசாய மூலப் பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்களின் தேவை வெகுவாக அதிகரிக்கும். தொழில் விரிவாக்கத்தின் விளைவாக வர்த்தகம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு பெருகுவதால் விவசாய வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் கிடைக்கும். விவசாய இடுபொருள் தேவைகளையும் தொழிற்சாலைகள் பூர்த்தி செய்யும்.

இந்தியா விரைந்து தொழில்மயமாக வேண்டும் என்ற நோக்கத்தோடு இரும்பு எஃகு, இயந்திர உற்பத்தி, சிமெண்ட், மின்சார உற்பத்தி போன்ற அடிப்படை கனரகத் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டன. குறிப்பாக இந்தியாவின் எஃகுத் தேவையைப் பூர்த்தி செய்ய பிலாய், ரூர்கேலா, துர்காபூர் எஃகுத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. அதேபோன்று சித்தரஞ்சன் ரயில்பெட்டித் தொழிற்சாலை, சென்னை ஒருங்கிணைந்த ரயில்பெட்டித் தொழிற்சாலை, இந்துஸ்தான் மெஷின்டூல்ஸ் தொழிற்சாலை, இந்தியன்

தொலைபேசி தொழிற்சாலை, கேபிள் தொழிற்சாலை ஆகியவை துவக்கப்பட்டன. விவசாயிகள் உரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சிந்திரி உரத் தொழிற்சாலை துவக்கப்பட்டது. பல சணல், சர்க்கரை, துணி மற்றும் நூற்பாலைகள் நவீனமயமாக்கப் பட்டன. ரயில் மற்றும் பாதைப் போக்குவரத்துத் தொழில் விரிவுபடுத்தப்பட்டது. பல்வேறு தனியார் துறைத் தொழில்களிலும் தொழில் முனைவோர்கள் முதலீடு செய்தனர். தொழிற்சாலைகளையும், அணைக்கட்டுகளையும் கோயில்களாகவும், மசூதிகளாகவும், தேவாலயங்களாகவும், குருத்துவாராக்களாகவும் பார்த்தார் நேரு.

**அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி**

நேருவின் ஆட்சிக் காலத்தில் அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும், வறுமையை ஒழிக்கவும், அறிவியல் தொழில்நுட்ப முறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும் என்பதில் நேரு குறியாக இருந்தார். மக்களிடையே மூட நம்பிக்கைகள் மறைந்து, பத்தாம் பசலிப் பழமைவாதம் விலகி, அறிவியல் மனப்பான்மை (Scientific Temper) வளர வேண்டும் என்று விரும்பினார் நேரு. அந்த நோக்கத்தோடு அவர் மேற்கொண்ட மகத்தான முயற்சியே 1958-ல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அறிவியல் கொள்கைத் தீர்மானம் (Scientific Policy Resolution) ஆகும். அத்தீர்மானம் சுதந்திர இந்தியாவின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்தது எனலாம். பொருத்தமான முறைகள் மூலம் அனைத்துத் துறைகளிலும் அறிவியல்- தொழில்நுட்ப மனப்பான்மையையும் ஆராய்ச்சியையும் வளர்ப்பதே அறிவியல் கொள்கைத் தீர்மானத்தின் நோக்கமாகும். நேருவால் வரையப்பட்ட அத்தீர்மானம் இந்தியாவின் ஒருமைப்பாட்டை உறுதி செய்யும்

பயனுள்ள ஆற்றல் மிக்க கருவியாகப் பயன்படும் என்று எதிர்பார்த்தார் என்று குறிப்பிட்டுள்ளார் நூருல் ஹாசன்.

அறிவியல் கொள்கைத் தீர்மானத்தின் நேர் விளைவே அறிவியல் தொழில் ஆய்வுக் கழகம் (The Council of Science and Industrial Research) பலப்படுத்தப்பட்டதாகும். 1942-ல் துவக்கப்பட்டு செயல்பட்டு வந்த இக்கழகத்துக்குப் பிரதமர் நேருவே தலைமை தாங்கி வழிநடத்தினார். இக்கழகம் இந்தியா முழுவதும் 28 தேசிய ஆய்வுக் கூடங்களை (National Laboratories) நிறுவியது. இவ்வாய்வுக் கூடங்களில் பல்வேறு தொழில்களுக்கு உதவக் கூடிய நடைமுறை சாத்தியமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பல ஆராய்ச்சித் திட்டங்களுக்கு அரசாங்க மானிய உதவி தாராளமாக வழங்கப்பட்டது. 1964-ல் 495 ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. திறமைமிக்க இளம் அறிவியல் ஆய்வாளர்களுக்கு உதவித் தொகைகள் (Junior Fellowships) வழங்கப்பட்டன.

அறிவியல் தொழில் ஆய்வுக் கழகம் பல்வேறு கூட்டுறவு ஆராய்ச்சி சங்கங்களை (Co-operative Associations) ஏற்படுத்தியது. இச்சங்கங்கள் ஆய்வுக் கழகத்திடமிருந்து மானிய உதவி, தொழில்நுட்ப ஆலோசனை, தொழில் திறன் பயிற்சி, ஆய்வு உபகரணங்கள் போன்றவற்றைப் பெற்று அறிவிய தொழில்நுட்ப ஆராய்ச்சி எல்லையை விரிவுபடுத்தின.

தேசிய ஆய்வுக்கூடங்களில் தொடர்பு மையங்கள் (Liaison Units) அமைக்கப்பட்டன. இம்மையங்கள் தொழில் மற்றும் தொழிலாளர் சங்கங்கள், அரசாங்கத் துறைகள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளைப் பயன்படுத்துவோர் ஆகியோருடன் தொடர்புப் பாலங்களாகச் செயல்பட்டன. புதுடில்லியில் ஒரு தொழில்தொடர்பு விரிவுப் பணி மையம் (An Industrial Liaison and Extension Service Unit) நிறுவப்பட்டது. அம்மையம் குறிப்பாகக்

கிராம மக்களின் பொருளாதார வாழ்க்கை நிலை உயர்வடைவதற்காக அறிவியல் அறிவையும் ஆராய்ச்சியையும் பயன்படுத்த உதவி செய்தது.

அறிவியல் தொழில் ஆய்வுக் கழகத்தின் மற்றொரு சாதனை கிராமங்களில் விஞ்ஞானக் கூடங்களை (Vigyan Mandirs) ஏற்படுத்தியதாகும். சமூக வளர்ச்சித் திட்டங்கள் நடைமுறையில் இருந்த பகுதிகளில் விஞ்ஞானக் கூடங்கள் துவக்கப்பட்டன. இவற்றின் மூலம் கிராம மக்களிடையே விஞ்ஞான விழிப்புணர்வு ஏற்படுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. விஞ்ஞான இலக்கியம் இந்திய மொழிகளில் எளிமையாக எழுதப்பட்டு வெளியிடப்பட்டன. விஞ்ஞான முறைகள் கிராம மக்களின் அன்றாட **வாழ்க்கையில் பயன்படுமாறு அறிமுகப்படுத்தப்பட்டன.**

**அணு ஆற்றல் ஆராய்ச்சி (Atomic Energy Research)**

1948-ல் அணு சக்தி கமிஷன் (Atomic Energy Commission) நிறுவப்பட்டது. டாக்டர் ஹோமி ஜெ பாபா (Dr.Homi J.Bhabha)வின் தலைமையின் கீழ் இக்கழகம் சிறப்பாகச் செயல்பட்டது. அணுசக்தியை அமைதித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவது பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்வதே அணுசக்தி கமிஷனின் நோக்கமாகும். ஹோமி பாபாவைச் செயலராகக் கொண்ட அணுசக்தித் துறை (Department of Atomic Energy) விவசாயம், உயிரியல், தொழில், மருத்துவம், மின்சார உற்பத்தி போன்றவற்றின் வளர்ச்சிக்கு அணுசக்தியைப் பயன்படுத்தி ஊக்குவிப்பதில் இத்துறை தனிக் கவனம் செலுத்தியது. நேருவின் ஆட்சிக் காலத்தில் பம்பாய்க்கு அருகேயுள்ள டிராம்பே (Trombay)யில் அமைக்கப்பட்ட அணுசக்தி நிறுவனம் (Atomic Energy Establishment) அணுசக்தி ஆராய்ச்சி வளர்ச்சிக்கான தேசிய மையமாகத் திகழ்ந்தது. அரிய சாதனைகளைச் செய்தது.

அணுசக்தி ஆய்வுக்காகப் பல பல்கலைக்கழக மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு தாராளமாக அரசாங்க நிதி உதவி வழங்கப்பட்டது. உதாரணமாக, பம்பாயில் உள்ள டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் (Tata Institute of Fundamental Research) அணுசக்தி அறிவியல் மற்றும் கணிதவியலில் தலைசிறந்த தேசிய உயராய்வு மையமாகத் திகழ்ந்தது. அதேபோன்று கல்கத்தாவில் உள்ள சாஹா அணுசக்தி இயற்பியல் நிறுவனம் (Saha Institute of Nuclear Physics) அகமதாபாத்தில் உள்ள இயற்பியல் ஆய்வுக் கூடம் (Physical Research Laboratory), காஷ்மீரில் குல்மார்க்கிலும், தமிழ்நாட்டில் கொடைக்கானலிலும் நிறுவப்பட்ட ஆய்வுக் கூடங்கள், தாராப்பூர் அணுசக்திக் கூடம், ட ராஜஸ்தானில் ராணா பிரதாப் சாகரில் உள்ள அணுசக்திக் கூடங்கள், தமிழ்நாட்டில் கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகியவை மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியோடும் ஆதரவோடும் நன்கு வளர்ந்தன. இந்நிறுவனங்களின் பங்களிப்புகள் பெருமைக்குரியவை.

## நேருவின் அணு ஆயுதக் கொள்கை

நேரு அணு ஆற்றலுக்கு நண்பன்; ஆனால் அணு ஆயுதத்துக்கு எதிரி. அவர் அணு ஆற்றலை ஆக்கப்பூர்வமான அமைதியான வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதை ஆர்வத்துடன் ஆதரித்தார். அதன் மூலம் ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கங்களை எளிதில் நிறைவேற்ற முடியும் என்று நம்பினார். அவர் மகாத்மா காந்தியின் அகிம்சை வழியிலிருந்து விலகிச் ல்லத் தயாராயில்லை. ஹோமி பாபா, சாந்தி சுவரூப் பட்நாகர், வி.கிருஷ்ணன் போன்ற அணு விஞ்ஞானிகளின் தொழில்நுட்ப அறிவையும் திறமையையும் இந்திய அணு ஆற்றல் கொள்கையை வகுக்கவும்

செயல்படுத்தவும் பயன்படுத்தினார். 1954-1963க்கு இடைப்பட்ட காலத்தில் அணு சக்தியை அமைதி வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்குத் தேவையான உள்கட்டமைப்பை ஆராய்ச்சி, பயிற்சி, பரிசோதனை, செயல்படுத்தல்-உறுதிப்படுத்தினார். நேரு மேலை உலகுக்கு வெளியே மிகச் சிறந்த அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி - பயிற்சி முறைகளில் ஒன்றை ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார் ஸ்டீபன் கோகன் (Stephen P-Gohen).

நேரு அணு ஆயுதங்களை பயங்கர அழிவு இயந்திரங்களா'க மனித குலத்தின் விரோதி'யாகக் கருதினார். மனித குலத்தை அழிக்கவல்ல ஆற்றல் கொண்ட இவ்வாயுதங்களை வெறுத்தார். இந்திய அணு ஆராய்ச்சியை சர்வதேச அணு ஆற்றல் முகமை (International Atomic Energy Agency)யின் மேற்பார்வைக்கு உட்படுத்த உடன்பட்டார். சீனா அணு ஆயுத நாடாக மாறக்கூடும் என்று எதிர்பார்த்த அமெரிக்கா, இந்தியாவும் அத்தகைய நாடாக வேண்டும் என்ற யோசனையை நிராகரித்தார். அணு ஆயுதத்தைத் தயாரிக்கக்கூடிய ஆற்றல் இந்தியாவுக்கு இருந்தும், அப்பரிசோதனையைச் செய்ய நேரு மறுத்துவிட்டார்.

**நேருவின் அணு ஆயுதக் கொள்கையின் சிறப்புக் கூறுகள் வருமாறு**:

1) அணு ஆற்றலை அமைதி வளர்ச்சித் திட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்;

2) அணு ஆயுதமாக்கலையும் (Nuclear Weaponisation) பேரழிவு ஆயுதங்களைத் (Weapons of Mass Destruction) தயாரிப்பதையும் இந்தியா எதிர்க்கும்;

3) உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவான அணு ஆயுதப் படைக்குறைப்பை இந்தியா ஆதரிக்கும்;

4) அணுத் தொழில்நுட்பத்தைப் பெறவும், பெருக்கவும், அமைதிக் காரணங்களுக்காகப் பயன்படுத் இந்தியா உறுதியோடு செயல்படும்;

5) இந்தியா ஆக்கப்பூர்வமான அணு சக்தி தொழில்நுட்பத்தில்

தன்னிறைவு பெறும்;

6) அணு ஆற்றல் உற்பத்தி, கட்டுப்பாடு, பாதுகாப்பு, பயன்பாடு பற்றிய சர்வதேச மேற்பார்வைக்கு இந்தியா ஆதரவளிக்கும்.

1963 ன் ஐ.நா. அவை 'அமைதிக்கு அணுத் திட்டம்' (Atoms for Peace Programme) மற்றும் பகுதிப் பரிசோதனைத் தடை உடன்படிக்கை (Partial Test Ban Treaty)யைக் கொண்டு வந்ததற்கு இந்தியாவும் காரணமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நேருவின் வெளிப்படையான, தெளிவான, ஆக்கப்பூர்வமான அணு ஆயுதக் கொள்கை உலக நாடுகளால் பாராட்டப்பட்டது.

**விண்வெளி ஆராய்ச்சி (Outer space Research)**

நேருவின் ஆட்சிக் காலத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கான துவக்கமே விண்வெளி ஆராய்ச்சி இந்திய தேசியக் குழு (Indian National Committee on Space Research) ஆகும். அக்குழு விண்வெளியை அமைதித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவது பற்றிய கொள்கை முடிவெடுக்க மத்திய அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியது. கேரளாவில் விண்வெளி நிறுவனத்தின் (National Aeronautical and Space Administration) துணையோடு ஒரு ஏவுகணை நிலையத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. செயற்கைக் கோள்களின் வழியாக செய்தித் தொடர்பு ஏற்படுத்துவதற்கான வசதிகளைப் பெருக்குவதற்கும் திட்டமிடப்பட்டது.

**தொழில்நுட்பக் கல்வி (Technical Education)**

தொழில்நுட்பக் கல்வி பெற்றோர் இன்றி இந்தியாவைத் தொழில்மயமான நாடாக்க முடியாது. எனவே, வெளிநாடுகளின் உதவியோடு காரக்பூர், பம்பாய், சென்னை, கான்பூர், டெல்லி நகரங்களில் இந்திய தொழில்நுட்பக் கல்லூரிகள் (Indian Institutes of Technology) நிறுவப்பட்டன. இவையன்றி பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், தொழில் பயிற்சிப் பள்ளிகள்

துவக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கானோர் தொழிற்கல்விப் பட்டம், பட்டயங்கள் பெற்றனர்.

### திட்டக் கமிஷன் (Planning Commission, 1950)

இந்தியத் திட்டக் கமிஷன் 1950 மார்ச் 15 ஆம் தேதி துவக்கப்பட்டது. இது அரசியலமைப்புச் சட்ட அங்கீகாரமில்லாத ஆலோசனைக் குழு ஆகும். இதன் தலைவர் பிரதமர், துணைத் தலைவர் முழு நேர அதிகாரி. திட்டக்கமிஷன் மத்திய அமைச்சரவையோடு நெருங்கிய தொடர்பு கொண்டு செயல்படும்.

**திட்டக்கமிஷனின் நோக்கங்களாவன:**

1). நாட்டு வளங்களை - இயற்கை, மனித மற்றும் மூலதன வளங்கள் - மதிப்பீடு செய்து அவற்றை மேலும் வளர்ப்பதற்கான வழிவகைகளைக் காணல்;

2) பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களைத் தயாரித்து தேவையான வளங்களைத் திரட்டி, திறமையாகப் பயன்படுத்தல்;

3). பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான வளங்களில் பற்றாக்குறை இருப்பின் அவற்றைக் கண்டறிந்து நிறைவு செய்வதற்கான ஆலோசனைகளைக் கூறல்;

4). திட்டங்களின் முன்னுரிமைகளைத் தீர்மானித்தல், எந்த நிலைகளில் திட்டங்களை எவ்வாறு செயல்படுத்துவது என்பதை நெறிப்படுத்தல்;

5). பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ள காரணங்களைக் கண்டறிந்து களைதல்;

6). திட்டச் செயல்பாடு பற்றி அவ்வப்போது மதிப்பீடு செய்து மேற்கொண்டு பொருளாதாரப் பெருக்கத்துக்கான கொள்கை முடிவுகள் எடுப்பதற்கான பரிந்துரைகளைச் செய்தல்.

**REFERENCE**

Vengadesan, K. 2012. History of Contemporary India.1947-2012.V.C. Publications, Rajapalayam.